இருக்கும் பேராசிரியர்கள் எல்லாம், உலகத்திலே உள்ள பெரிய நிறுவனங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு பெருமையாக வாழ்ந்து, இந்திய நாட்டிற்கும், சிறப்பாக தமிழ் நாட்டிற்கும் பெருமை அளித்த அந்தப் பெருமகனரை இழந்து வருந்துகிற அவரது குடும்பத்தாருக்கு நம்முடைய மன்றத்தினர் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட நேரம் மவுனமாக நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பெரியாருக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகின்றன. பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை காலை 9-57 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

2) பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

181. Notification issued in G.O.P. No. 554, Commercial Taxes and Religious Endowments, dated the 6th November 1974 in regard to amendment to the Revenue Department Notification No. 407 of 1972, published at page 895 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 12th July 1972. [*Laid on the table of the House under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959)].